அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 20/2018

எனது இலக்கம்: EST-6/06/TVL/3030
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.08.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவினை திருத்தியமைத்தல்**
**இணைந்த படிகள்**

தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 4:4:3 மற்றும் 4:5 ஆம் உட்பிரிவின் பால் தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. அவ் உப பிரிவினை பின்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கு 2018.07.24 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

4:4:3 ஓர் உத்தியோகத்தர் 24 மணித்தியாலங்களுக்கு அதிகமாக சேவை நிலையத்துக்கு வெளியே செலவிடும் போது மூன்று வார உச்சக்கால எல்லை வரை, அவ் ஒவ்வொரு 24 மணித்தியால காலப்பகுதிக்கும் இணைந்த படியின் 50% வீதம் மேலதிகமாக அவருக்கு செலுத்தப்படலாம். மேலதிக 50% வீத இணைந்த படி, 24 மணித்தியாலங்களுக்குக் குறைந்த ஏதேனுமொரு காலப்பகுதிக்குச் செலுத்தப்படலாகாது.

4:5 கட்டணத் தொகை – கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய இணைந்த படி தீர்மானிக்கப்பட வேண்டியது, கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரின் மாதாந்த சம்பளத்தின் அடிப்படையிலாகும். (1:3 ஆம் உப பிரிவைப் பார்க்க)

| மாதாந்த அடிப்படைச் சம்பளம் | 24 மணித்தியாலங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதிக்குமான இணைந்த படிகள் |
|---|---|
| ரூபா. 32,779.00 மாதச் சம்பளம் வரை | ரூபா. 700.00 |
| ரூபா. 32,780.00 முதல் ரூபா. 43,479.00 வரை | ரூபா. 800.00 |
| ரூபா. 43,480.00 ற்கு மேற்பட்ட மாதச் சம்பளம் | ரூபா. 1,000.00 |

03. மேற்படி ஏற்பாடுகள் 2018.08.23 ஆந் திகதி அல்லது அன்றைய தினத்தின் பின்னர் உத்தியோகபூர்வ பிரயாணங்கள் தொடர்பாக ஏற்புடையதாகும்.

04. மேற்படி சுற்றறிக்கை பொது திறைசேரியின் உடன்பாட்டுன் பிரசுரிக்கப்படுகின்றதுது.

ஒப்பம்/. பத்மசிரி ஜயமான்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு